**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.106/2021**

2025 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 24.09.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நரசிம்மன் (PW–1) | வயது | : | 42/2025 |
| த/க பெயர் | : | திரு. அனந்த கிருஷ்ணன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** என்ன காரணத்திற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மெடிக்கல் கடையை பூட்டிவிட்டு என்னை காலி செய்துவிட்டார் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது மன்னார்குடி சின்ன கான்வெண்ட் பள்ளி எதிரில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

**2.** தாவா சொத்து கடையில் மெடிக்கல் வைத்திருந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மெடிக்கல் உடன் ஆவின் பாலகமும் சேர்த்து வைத்திருந்தேன் என்றால் சரிதான். ஆவின் பாலகம் நடத்துவதற்கு அரசிடமிருந்து உரிய அனுமதி சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அந்த சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**3.** 29.10.2021ம் தேதியன்று பிரதிவாதியானவர் அத்துமீறி கடையை காலி செய்து அவரது வசம் எடுத்துக்கொண்டதான எனது முதல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**4.** 2021ல் இருந்து பிரதிவாதிகள் கடையை பூட்டி பிரதிவாதிகள் வசம் இதுநாள் வரை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது தாவா சொத்து கடையில் எம்மிக் கஃபே என்ற ரோஸ் மில்க் கடையை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். எம்மிக் கஃபே என்ற ரோஸ் மில்க் கடை எவ்வளவு நாட்களாக வைத்துள்ளார்கள் என்றால் கடந்த 2, 3 மாதங்கள் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2015 முதல் 2021 வரையிலான ஆவணங்கள் என்றால் சரிதான்.

5. 2021 முதல் 2025 வரை தாவா சொத்து கடையானது பிரதிவாதிகள் வசம் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்தானது பிரதிவாதிகள் வசம் தற்போது இருப்பதால் நான் கேட்கின்ற பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.06 17:52:36 +0530

District Munsif
Mannargudi.